விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 301 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 29 திங்கட்கிழமை (16.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பசிலின் கைப்பொம்மையானாரா ரணில் நிறைவேற்று அதிகாரமும் ஒழிக்கப்படுமா?

### எதிர்க்கட்சிகள் கேள்வி





(கொழும்பு)

அடுத்த 15 வருடங்களுக்கு பொதுஜன பெரமுனவில் இருந்து ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முடியாது என்பதற்கு வலுவான சாத்தியக் கூறுகள் இருப்பதாலேயே நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஸ்ரீலங்கா பொது 11

## யாழ்ப்பாணம் - தமிழகம் கப்பல் சேவை இரத்து

### முன்பதிவுகள் இல்லாததால் வாரத்தில் மூன்று நாட்களே இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்குமான பயணிகள் கப்பல் சேவை நேற்று இரத்துச் செய்யப்பட்டது.

போதிய முன்பதிவுகள் இல்லாததால் ஆரம்பித்த மறுநாளே இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இனி வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரமே கப்பல் சேவை நடை 11

# யாழில் வேகமாக பரவும் கண்நோய்

## அவதானமாக இருக்குமாறு சுகாதாரத்துறை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கண் நோயானது தற்போது வேகமாக பரவி வருகின்றது. இது தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம் இலங்கைக்கு மற்றுமொரு ஐ.எம்.எப் குழு

### முக்கிய முடிவுகள் எட்டப்பட வாய்ப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் மற்றுமொரு குழு அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான கடன் தொகையின் இரண்டாம் தவணை குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், வரி அதிகரிப்பு தொடர்பில் 11

## ஜனாதிபதி ரணில் சீனா விஜயம்

(கொழும்பு)

சீனாவில் நடைபெறும் Belt & Road திட்டத்தின் 03ஆவது சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றிரவு சீனா நோக்கி பயணமானார்

இதன்படி, ஜனாதிபதி ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் சீனாவிற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ 02

### நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்கும்

## எந்தப் பிரேரணையையும் நான் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை

### நீதி அமைச்சர் விஜயதாஸ விளக்கம்




(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தல் முறைமையினை இல்லாதொழிப்பது எனது நோக்கமன்று. அதற்காக நான் எந்த சட்டமூலத்தையும் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவில்லை என நீதிய 11

## இலங்கையில் இனப் பிரச்சினை என்றொன்று இல்லவே இல்லை

### சத்தியம் செய்கிறார் உதய கம்மன்பில



(கொழும்பு)

"இலங்கையில் இனப் பிரச்சினை என்று ஒன்றும் இல்லை. இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகள்தான் அரசியல் பிழைப்புக்காக இனப் பிரச்சினை நிலவுகின்றது என்றும், தீர்வு 11

## மயிலத்தமடு பண்ணையாளர்கள் விவகாரத்தில் தீர்வு காண்க

### ஜனாதிபதி ரணில் பணிப்பு

(கொழும்பு)

மயிலத்தமடு மாதவனை கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்களின் தரவை நிலம் ஆக்கிரமிக்கப்பட்டமை தொடர்பில் உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் செய 02

## பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்து யாழில் பிறந்தநாள் கொண்டாட்டம்

### நூற்றுக்கு மேற்பட்டவர்களை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்து யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் பிறந்தநாள் கொண்டாடிய நூற்றுக்கு மேற்பட்டவர்களை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு 50க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த 150க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அண்மையில் ஒன்றுகூடி தங்களில் ஒருவரின் பிறந்தநாளை 02

**நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழில்...

யாழ்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் குறித்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அதில், வேகமாக பரவிவரும் கண் நோயிலிருந்து (Viral Conjunctivitis) எம்மை பாதுகாப்போம்' என்ற தலைப்பில் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி. மு. மலரவன் அறிவுறுத் தல்களை வழங்கியுள்ளார்.

இக் கண்நோயானது 70 வீதமானவர் களுக்கு ஒரு கண்ணில் வந்தால் மற் றைய கண்ணிலும் வரும். வீட்டில் உள்ள ஒருவருக்கு இக்கண்நோய் வரும் பட்சத் தில் 25 வீதம் வீட்டிலுள்ள ஏனைய வர்களுக்கும் பரவக்கூடிய சாத்தியம் உள்ளது.

குறித்த கண் நோயானது நேரடி தொடுகை மூலம் பரவக்கூடியது என்பத னால் பாடசாலைகள், அலுவலகங்கள், மற்றும் பொதுச்சந்தைகள் போன்ற அதி களவானவர்கள் கூடும் இடங்களில் பர ம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.எனவே இந்நோயினைக் கட்டுப்படுத்தும் நடவடிக் கைகளை உடனடியாக தீவிரப்படுத்த வேண்டிய ஒரு அவசர தேவை உணரப் படுகின்றது.

இந்நோயினைக் கட்டுப்படுத்துவது மிகவும் இலகுவானது. பின்வரும் சில சுகாதார நடைமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றுவதன் மூலம் இந்நோய்த்தாக் கத்தினை இருவார காலப்பகுதிக்குள் கட்டுப்படுத்த முடியும்.

01.தொற்று ஏற்பட்ட (கண்நோய் ஏற் பட்ட) ஒருவர் பாடசாலைக்கோ அலுவ லகத்திற்கோ செல்வதனை முற்றாக தவிர்த்து சாதாரண தனிமைப்படுத்தலில் (Isolation) அவசியம். கண் சிவப்பு மறைந்து கண்ணில் இருந்து நீர்வடிதல் முற்றாக குணமடைந்த பின்னரே (3 - 5 நாட்கள் வரை) பாடசாலைக்கோ அலு வலகத்திற்கோ செல்ல வேண்டும்.

02.இந்நோய் தொற்றுக்குள்ளான ஒருவர் கண்ணில் இருந்து வரும் நீரை கைகளினால் தொட்ட பின்னர் கைகளைக் கழுவாது வேறு ஒருவரையோ ஒரு பொரு ளினையோ தொடுவதனை முற்றாக தவிர்த்தல் அவசியம்.

03.கண்நோய் ஏற்பட்டவர்களோ அவர்களை பராமரிப்பவர்களோ அன்றி நோய் தொற்று ஏற்படாது முன்னெச் சரிக்கையாக சாதாரண பொது மக்களோ அடிக்கடி கைகளினைச் சவர்க்காரமிட்டு நன்றாக கழுவுதல் வேண்டும்.

04.நோய் ஏற்பட்டவர்களும் சரி சாதா ரண பொதுமக்களும்சரி எச்சந்தர்ப்பத்திலும் கண்களினைக் கசக்குவதனையோ கண் களை தேவையற்று தொடுவதனையோ முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.

05.கண்நோய் பாதிப்புக்குள்ளானவர் பாவித்த துவாய், தலையணை, உண வுத்தட்டுக்கள் தேநீர் குவளைகள் கட்டில் கதிரை என்பவற்றை பாவிப்பதனை முடிந்தவரை தவிர்த்தல் முடியாத சந் தர்ப்பங்களில் தொற்றுநீக்கி கொண்டு சுத்தம் செய்த பின்னர் பாவித்தல்.

06.கண்களுக்கு லென்ஸ் பாவிப் பவர்கள் நோய் குணமடையும் வரை அதனைப் பாவிப்பதனைத் தவிர்த்தல் வேண்டும்.

07.நீச்சல் தடாகத்திற்கு செல்வதனை தொற்றுக்குள்ளானவர்கள் முற்றிலும் தவிர்த்தல் அவசியம்.

08.அடிக்கடி கைகளையும் முகத்தி னையும் சவர்க்காரமிட்டு கழுவுவதுடன் குளித்து சுத்தமாக இருத்தல் வேண்டும்.

09.கண்நோய் தாக்கம் ஏற்பட்டவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு மருந் தினையும் கண்களுக்கு விடுவதனை முற்றிலும் தவிர்த்தல் அவசியம். கண் வைத்தியர் ஒருவரின் ஆலோசனையின்றி ஸ்ரீரோயிட் மருந்துகளோ anti biotic மருந்துகளையோ உள்ளெடுப்பதனை தவிர்த்தல் வேண்டும்.

10.எனினும் பாதிப்புக்குள்ளான கண்களுக்கு குளிரான ஒத்தடம் (Cold compression) மற்றும் செயற்கை கண் ணீர் (Artificial Tears) பாவிக்க முடியும்.

எனவே அனைவரும் யாழ் மாவட் டத்தில் இக்கண்நோயின் பரம்பலை இரண்டு மூன்று வாரங்களுக்குள் கட்டுப் படுத்த மேற்கூறிய சுகாதார அறிவுரை களைப் பின்பற்றுவதன் மூலம் தமது பங்களிப்பினை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (ம-7)

## மயிலத்தமடு...

லாளர், ஆளுங்கட்சி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர், மகாவலி DG, பொலிஸ்மா அதிபர் மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துரைத்த ஜனாதிபதி விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு என் பன இந்த நாட்டின் முதுகெலும்பாகும். இவை இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும்.

வெளி மாவட்டங்களில் இருந்து வந்து மட்டக்களப்பு மயிலத்தமடுவில் விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங் களிலேயே விவசாயம் செய்ய மாற்று இட ஒதுக்கீடுகள் வழங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இவ்வாறு மாற்று இடங்கள் வழங் குவதன் ஊடாக பண்ணையாளர்கள், விவசாயிகள் என இரு தரப்பினருடைய பிரச்சினைகளும் முடிவுக்கு வரும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் பண்ணையாளர்களின் பிரச்சி னைகள் முடிவுக்கு வரும் வரை கால் நடைகளுக்கு உணவுகளை வழங்க தேவையான உதவித் தொகைகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிக ளுக்கு பணிப்புரை வழங்கினார். (7)

## பொதுமக்க...

கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர்.

அதனை டிக்டொக் போன்ற சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தும் உள்ள னர்.

சட்டவிரோதமான முறையில் கூட்டம் கூடி பிறந்தநாள் கொண்டாடி, மக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத் தியதுடன் மக்களை அச்சுறுத்தும் வகை யில் நடந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கொண்டாட் டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இருவரை கைது செய்து நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதவான் முன்னிலையில் முற்படுத்தி இருந்தனர்.

அவர்களை 14 நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், சம்பவத்துடன் தொடர்புடைய பிறந்தநாள் காரன் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்து முற்படுத்த வேண்டும் என பொலி ஸாருக்கு பணித்துள்ளார்.

அதனை அடுத்து பொலிஸார் அனை வரையும் கைது செய்வதற்கு தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)


## ஜனாதிபதி...

விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி சீனா சென்றுள்ள காலப்ப குதியில் அவருக்கு கீழுள்ள அமைச்சு களின் பொறுப்புகள் இராஜாங்க அமைச் சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இன்று முதல் இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்ன கோன், பாதுகாப்பு பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய, நிதி பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு ஊக்கு விப்பு பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும், வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னி யாரச்சி சுற்றாடல் பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-7)


# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை ஐயர் ஆறுமுகசாமி ஐயர்

(செல்வச்சந்நிதி ஆலய பிரதமகுரு)

செல்வச்சந்நிதி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வச்சந்நிதி ஆலய பிரதமகுரு திரு. கணபதிப்பிள்ளை ஐயர் ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஐயர் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சாம்பசிவம் - அன்னமலர் தம்பதிகளின் மருமகனும் ஆ.ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் கோபாலகிருஸ்ணன்(கனடா) அமரர் ஜெகதீஸ்வரன், வள்ளிநாயகி, விஜியதர்சினி, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் தங்கவேல் ஐயரின் அன்பு சகோதரரும் த.அல்லிமலர் அவர் களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2023) அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியை களுக்காக காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகட்கு:
077 468 8772(மகள்)

தகவல்:
குடும்பத்தினர்

(17479)

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
24
.
02
.
1934



உதிர்வு
14
.
10
.
2023

எமது ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவரும் பஞ்சுகர்த்தாவும் ஆகிய
தி.இராஜேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி. தனலக்ஷ்மி திருநாவுக்கரசு

அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த கவலையும் அதிர்ச்சியும் அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மனின் பாதார விந்தங்களை பணிந்து வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(17478)

பரிபாலன சபையினர் மற்றும் இளைஞர் கழகத்தினர்
கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானம்
கலட்டி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் விவசாயிகளிடம் 10 வீத கழிவு அறவீடு தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்ட விவசாய அமைச்சர்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாவட்டத்தின் சில சந்தைகளில் அமுலில் உள்ள 10 வீத கழிவு நடைமுறையினை உடனடியாக நிறுத்தி குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் வைத்து இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து 10 வீத கழிவு அறவிடும் நடைமுறை செயற்படுத்தப்படுகின்றது .

குறிப்பாக திருநெல்வேலி, மருதனார்மடம், சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் விவசாயிகளிடம் கழிவு அறவிடும் நடைமுறை இடம்பெற்று வருகின்றது. குறித்த சந்தைகளில் விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டு அவர்களிடம் இந்த கழிவு அறவிடப்படுகின்றது.

இதனால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றார்கள். இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவும் அதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்ததையடுத்து குறித்த விடயம் தொடர்பில் பொலிஸார் இதனை தடுத்து நிறுத்துவதுடன் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் உத்தரவிட்டார்.

அத்தோடு குறித்த சம்பவத்தினை பொலிஸாரால் மாத்திரம் தடுத்து நிறுத்த முடியாது. இதற்கு பிரதேச செயலர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் கழிவு நடைமுறை தொடர்பிலான சகல தகவல்களையும் பொலிஸாருக்கு வழங்கினால் பொலிஸாரினால் அதனை கட்டுப்படுத்தி சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு இலகுவாக இருக்கும் எனவும் வடக்கு ஆளுநர் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் காலங்களில் பிரதேச சபைகள் சந்தைகளை குத்தகைக்கு கொடுக்கும்போது இந்த கழிவு நடைமுறையை அமுல்படுத்த கூடாது என்ற நிபந்தனையும் பின்பற்றி வழங்க வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (நி-33-104)

## அப்துல்கலாமின் 92 ஆவது பிறந்த தின விழா யாழில்



(கொழும்பு)

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாமின் 92 ஆவது பிறந்த தினம் நேற்று யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்றது.

யாழ்.பொது நூலகத்தில் இந்தியன் கோனர் பகுதியில் அமைந்துள்ள அப்துல் கலாமின் சிலைக்கு யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார். (நி-33)

## தமிழ் அரசுக் கட்சியின் கோப்பாய் தொகுதி கிளைக்கு புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கோப்பாய் தொகுதிக் கிளையின் நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நீர்வேலியில் நடைபெற்றது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் ம.கபிலன் வாக்கெடுப்பின் மூலம் வெற்றி பெற்று தொகுதிக் கிளைத் தலைவராக தெரிவானார்.

அ.பரஞ்சோதி செயலாளராகவும் கஜேந்திரகுமார் பொருளாளராகவும் உப தலைவராக அ.கமலரேகனும் உப செயலாளராக கலைமோக னும் மேலும் 3 பெண்கள் உட்பட 10 நிர்வாக சபை உறுப்பினர்க ளும் தெரிவு செய்யப்பட்டனர். (நி-33)

## மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு நீர்ப்பம்பிகள்

(யாழ்ப்பாணம்)

50% மானிய அடிப்படையில் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு சோலர் நீர்ப்பம்பிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட விவசாயக்குழு கூட்டம் மாவட்ட செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

அதன் போது தற்போதைய விலைவாசி ஏற்றத்தால் மாற்றுவலு நீர்ப்பம்பிகளை பயன்படுத்தும் விதமாக சோலர் நீர்ப்பம்பிகளை பெற்றுத்தருவது தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயிகளின் பிரதிநிதிகளால் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை விவசாய அமைச்சரின் கவனத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கொண்டு சென்றிருந்தார்.

அதற்கு 50% மானிய அடிப்படையில் அவற்றை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் விவசாயிகளின் ஒத்துழைப்புடன் அத்திட்டத்தை நடைமுறைப் படுத்த விரும்புவதாகவும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (நி-33-104)

## தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து 2 படகுகளுடன் 15 இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 15 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2 டோலர் படகுகளில் எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 15 இந்திய மீனவர்களும் தற்போது தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் தலை மன்னார் பொலிஸார் குறித்த மீனவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-285)

## 13 தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 13 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மீன் பிடியில் ஈடுபட்டிருந்த வேளை அப்பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன் போது கடற்றொழிலாளர்களின் 3 படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களை மயிலிட்டி துறைமுகத்திற்கு அழைத்து வந்து, மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-33-104)

## ஏற்றுமதிக்கான தரச்சான்றிதழ் பெறுவதை இலகுபடுத்துமாறு ஆளுநர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் விவசாயிகள் கடும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

எனவே விவசாயிகள் ஏற்றுமதி தரச் சான்றிதழ் பெறுவதை இலகுபடுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் விவசாய அமைச்சர் மகிந்த அமர வீரவிடம் கோரிக்கை விடுத்தார்

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விவசாய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்படி கோரிக்கையினை முன் வைத்தார்.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றார்கள் அதில் முக்கியமாக இந்த ஏற்றுமதிக்கான தரச் சான்றிதழ் பெறுவதில் பல இடர்பாடுகளை எதிர் நோக்குகின்றார்கள். அந்த தரச் சான்றிதழை பெறுவதற்காக நீண்ட தூரம் கொழும்பிற்கு பயணம் மேற்கொண்டு தங்களுடைய தரச் சான்றிதழை பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

எனவே அதனை இலகுபடுத்தி இலகுவான முறையில் தங்களுடைய ஏற்றுமதி தரச் சான்றிதழ் பெறுவதற்கு ஆவண செய்யுமாறு கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி செய் யப்படும் பொருட்கள் வெளியிடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகின்றது. எனவே அவ்வாறு விற்பனை செய்யப்படும் போது அந்த பொருட்களுக்கான விலை நிர்ணயத்தினையும் கருத்தில் கொள்ளுமாறும், கோரிக்கை விடுத்தார். (நி-33)

## முல்லைத்தீவு கூளாமுறிப்பில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

### இளைஞர்கள் இருவர் கைது

(முல்லைத்தீவு)

நாவற்காடு பிரதேசத்திலுள்ள கூளாமுறிப்பு காட்டுப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றில் புலனாய்வு பிரிவினர் சந்தேக நபர் இருவரை கைது செய்துள்ளதுடன் அங்கிருந்து 760 லீற்றர் கசிப்பு, 4 கோடாவினையும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் சில பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பில் அப்பகுதியை சேர்ந்த 30, 32 வயதுடைய இளைஞர்கள் இருவரையும் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளதாகவும் முல்லைத்தீவு பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நடப்பு சம்பியன் இங்கிலாந்தை வீழ்த்தியது ஆப்கானிஸ்தான்



2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 13ஆவது போட்டியில் நடப்பு சம்பியன் இங்கிலாந்தை விழ்த்தி ஆப்கானிஸ்தான் அணி 69 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

டெல்லியில் நேற்று இடம் பெற்ற போட்டியில் இங்கிலாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப் பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 284 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.


அணிசார்பில் அதிகபடியாக, ரஹ்மானுல்லா குர்பாஸ் 80 ஓட்டங்களையும், இக்ராம் அலிகில் 58 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், இங்கிலாந்து அணியின் ஆதில் ரஷித் 42 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 285 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 40.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியை தழுவியது.

அணிசார்பில், அதிகபடியாக ஹாரி புரூக் 66 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், ஆப்கானிஸ்தான் அணியின் முஜீப் உர் ரஹ்மான் 51 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (ம-7)



# இலங்கை அணித் தலைவராக குசல் மெண்டிஸ் நியமனம்



ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் (ODI) இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் அணி தலைவராக குசல் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னைய அணி தலைவர் தசுன் ஷனகா காயம் காரணமாக அணியில் இருந்து தற்காலிகமாக விலகியதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று வரும் உலகக் கோப்பையின் எஞ்சிய போட்டிகளுக்கு இலங்கை அணியை அவரே வழிநடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஷனகவுக்கு பதிலாக சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதுமட்டுமன்றி வேகப்பந்து வீச்சாளர் மதீஷ பத்திரன காயம் அடைந்துள்ளதால் இலங்கை அணி மற்றுமொரு பின்னடைவை எதிர்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# 300 சிக்சர்கள் அடித்து ரோகித் சர்மா சாதனை

300 சிக்சர்கள் அடித்து ரோகித் சர்மா புதிய சாதனை படைத்துள்ளார்.



உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் நேற்று மோதின. இதில் டாஸ் வென்ற இந்திய அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, இந்திய அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 191 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி 30.3 ஓவரில் 192 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் அதிரடியாக விளையாடிய ரோகித் சர்மா ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். அவர் 63 பந்துகளில் 86 ரன்கள் எடுத்து அவுட் ஆனார். இதில் 6 பவுண்டரி 6 சிக்சர்கள் அடங்கும்.

6 சிக்சர்கள் விளாசியதன் மூலம் ரோகித் சர்மா புதிய சாதனையை படைத்துள்ளார். ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் 300 சிக்சர் அடித்த 3-வது வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். இவருக்கு முன்னர் சாகித் அப்ரிடி 351 சிக்சருடன் முதல் இடத்திலும் கிறிஸ் கெய்ல் 331 சிக்சருடன் 2-வது இடத்தில் உள்ளனர். (ம-7)




## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 3 | 3 | 0 | 6 |
| 2 | நியூசிலாந்து | 3 | 3 | 0 | 6 |
| 3 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 4 |
| 4 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 4 |
| 5 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 2 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 3 | 1 | 2 | 2 |
| 7 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 2 |
| 8 | இலங்கை | 2 | 0 | 2 | 0 |
| 9 | நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 |
| 10 | அவுஸ்திரேலியா | 2 | 0 | 2 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் குறைவடைந்துள்ள மதுபான விற்பனைகள்

(கொழும்பு)

நாட்டில் மது விற்பனை குறைந்துள்ளதால் கலால் வரி வருமானம் குறைந்துள்ளதாக கலால் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டிசெம்பர் 31, 2022 இற்குள் கலால் வருவாயின் பாக்கிகள் குறித்தும் கோபா குழு கவனம் செலுத்தியுள்ளது.

மேலும் இந்த மாதம் 30 ஆம் திகதிக்குள் நிலுவைத் தொகையை செலுத்தாத மதுபானக் கடைகளின் உரிமத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதி காரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி)


# பணி ஓய்வு சேவை நயப்பு வாழ்த்து

16.10.2023

திருமதி. கலா செல்வக்குமரன்

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியை)



Best Wishes

சேவை விபரம்

| | |
|---|---|
| யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி | 29.03.1990 – 31.12.1996 |
| யா/செம்பியன்பற்று அ.த.க பாடசாலை | 01.01.1997 – 04.05.1998 |
| யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை | 05.05.1998 – 31.12.2000 |
| யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை | 01.01.2001 – 15.02.2015 |
| யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி | 16.02.2015 – 16.10.2023 |

பாசமுடன் பண்பு சேர்த்து
எம் பள்ளி பாலகர்க்கு அறிவூட்டி......
நேசமாய் எம் மனதில் நீங்காத தடம்பதித்து
இன்றுடன் ஓய்வு பெறும் உங்கள்
ஓய்வுக்காலம் சிறக்கவும்
நீடித்த சுகத்தோடு நினைத்தது நிலைத்து
சிறப்பாக வாழவும் அன்பாக வாழ்த்துகின்றோம்

அதிபர் - ஆசிரியர் - பணியாளர் நலன்புரிச்சங்கம்
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
பருத்தித்துறை (17454)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 400 | 400 |
| தக்காளி | 250 | 300 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 140 | 150 |
| கோவா | 200 | 160 | 150 |
| கரட் | 180 | 300 | 280 |
| பூசணி | 80 | 80 | 60 |
| புடோல் | 100 | 140 | 150 |
| வாழைக்காய் | 180 | 180 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 300 |
| பெரிய வெங்காயம் | 280 | 220 | 240 |
| பாகற்காய் | 350 | 450 | 400 |
| வெண்டக்காய் | 120 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 |
| லீக்ஸ் | 160 | 150 | 140 |
| பீற்றூட் | 120 | 120 | 140 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 |
| போஞ்சி | 400 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 |
| இராசவள்ளி | 350 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 |
| வல்லாரை | 40 | 160 | 50 |
| ஈரப்பலா | 120 | 100 | 100 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2939

### சதீஸ்

எனக்கு ரொம்ப நாளாகவே ஒரு சந்தேகம்.
இந்தப் பேய் படத்தில ஏன் பேயெல்லாம்
பங்களாவா பார்த்து தங்குது



இந்தக் குடிசை வீடு, ஓட்டு வீடு
எல்லாம் உடம்புக்கு ஆகாதாமா

### ராம்

வாழை இலையில ஊத்துன ரசம் மாதிரியே
இருக்கு வாழ்க்கை.
எந்தப் பக்கம் போகுதுன்னே புரியல.



### ரேகா

அண்ணே இந்த வேரப் பாருங்க எவ்வளவு
சாப்ட்டா இருக்கு? ஆமாடா அதுக்கென்ன இப்போ?



இல்லன்னே அந்தக் காலத்திலேயே நம்மக்கிட்ட
Software இருந்திருக்கு பாருங்க

### மயூரன்

ஏங்க தீபாவளிக்கு எனக்கு பட்டுப்புடவை
எந்தக் கடையில எடுக்கப் போறீங்க?




சிசிடிவி கேமரா இல்லாத கடையில செல்லம்

### மாயா




### யதுஷன்

பர்ஸ்ல உள்ள காசு எல்லாம் புடுங்கிட்டு
ஒரு புது காலி பர்ஸ் கொடுப்பான் பாரு



அவன்தான் நகைக் கடைக்காரன்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிலிருந்து முல்லை நோக்கி பயணித்த பேருந்து மீது கல்வீச்சு தாக்குதல்




(நெளுக்குளம்)

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மீது நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் கல் வீச்சு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் கல் வீச்சு தாக்குதல் மேற்கொண்டு மோட்டார் சைக்கிளை விட்டு தப்பி சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் இ.போ.ச பேருந்தின் முன் பகுதியில் சிறிது சேதம் ஏற்பட்டதுடன் உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை.

பேருந்தில் பயணித்த பயணிகளுக்கு மாற்று பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் குறித்த பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார்மேற் கொண்டு வருகின்றனர். (நி-299)

# பாதிப்படைந்த விவசாயிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கி வைப்பு

(அராலி)

விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வறட்சியாலும் பொருளாதார வீழ்ச்சியிலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ். அரசாங்க அதிபர் அம்பாலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கலந்து கொண்டு 40 விவசாயிகளுக்கான கொடுப்பனவுகளை முதற்கட்டமாக வழங்கி வைத்தார்.

வறட்சியாலும் பொருளாதார ரீதியாக பின்னடைந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான தலா ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபா முதல் இருபது ஆயிரம் ரூபா வரை இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. மேலும் புதிதாக விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக 5 நபர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனர். (நி-6-104)



# தேசிய மட்ட போட்டிக்கு தகுதி பெற்ற யா/திருக்குடும்ப கன்னியர்மடம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கர்நாடக சங்கீத மாகாண மட்ட தமிழ்மொழித் தின போட்டியில் யா/திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் முதலிடங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.



கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீத மாகாண மட்ட போட்டியில் புல்லாங்குழல் தனி மற்றும் பல்லிய இசையில் முதலிடங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். (நி-90)

# கன்றினை ஈன்ற நிலையில் உயிரிழந்த பசுமாடு

(தருமபுரம்)

உருத்திரபுரம் பகுதியில் மேய்ச்சல் தரைவையினை நோக்கிச் சென்ற நான்கு பசுமாடுகள் வீதியோரமாக வெட்டப்பட்ட குழியினுள் தவறி விழுந்ததில் ஒரு பசுமாடு கன்றினை பிரசவித்த நிலையில் இறந்து போய் உள்ளது.

குறித்த சம்பவம் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்று ள்ளது. குழியில் வீழ்ந்த நான்கு பசு மாட்டினை காப்பாற்ற முற்பட்ட போதிலும் மூன்று பசு மாடுகளையே மீட்க முடிந்தது என மக்கள் தெரிவித்தனர்.

கன்று பிரசவிக்க சில மாதங்கள் உள்ள நிலையில் குறித்த பசுமாட்டினை குழியில் இருந்து மீட்கும் போதே கன்றினை ஈன்ற நிலையிலே இறந்து போய் இருந்தமை கவலையளிப்பதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். (நி-5-316)



# இராசிபலன்

16.10.2023
புரட்டாதி 29, திங்கட்கிழமை
துதியை பின்னிரவு 12.59 மணிவரை
சுவாதி முன்னிரவு 8.13 மணிவரை

சுபநேரம் -12.02-1.32 மணிவரை
இராகு காலம்-7.32-9.02 மணிவரை

சந்திராஷ்டமம்- ரேவதி,அச்சுவினி.

வளவன்

**மேஷம்**: தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்**: விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வருமானப் பெருக்கத்திற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்**: வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, செலவுக் கேற்ற வருமானம் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மகரம்**: பெரிய மனிதர்களின் சந்திப்பு நன்மை தரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுக முண்டு.

**ரிஷபம்**: பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், செய்தொழில் உற்சாகம் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகும்.

**சிம்மம்**: உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்**: ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற மனச் சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்**: சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலில் அதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்**: சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**: உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வழிபாட்டினால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**: இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்**: கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், ரோக பயமுண்டு.

நற்சிந்தனை இல்லாத நற்செயல்கள் நாளடைவில் நலிவடைந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சதுப்பன்னி / நீராரை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

"தின்றா லுரிசைத்தருந் தீராப் பயித்தியத்தைப் பொன்றாத நீரிழைப் புண்ணீரை - யென்றுமிந்த ஆராரைச் சாராம் வோட்டிவிடு நாவிதழால் நீராரைக் கீரையது நீ"

நீராரைக் கீரை நாவிற்கு சுவையைத் தரும். இது பித்த நோய், அதிமுத்திரம், இரத்தப் பிரமேகம் முதலியவைகளைப் போக்கும். இதை நிழலில் உலர்த்திக் குடிநீர் செய்து பால் சர்க்கரை சேர்த்து உட்கொண்டு வரலாம்.

Botanical name - Marsilea quafrifolia, Family name - Marsilea ceac, English name - Pepper wort, Sinhala name - Diya embulembiliya

இது குறைந்தளவு நீரில் அதாவது 6.8 அங்குல உயரமுள்ள நீரில் வளரும் கொடி. நீருக்கு தரையில் படுக்கையாகவுள்ள சுமார் 3, 4 மில்லிமீற்றர் பருமனுள்ள அடிக்கொடிகள் தரையோடு ஒட்டிப் பல மீற்றர் தூரம் நான்கு பக்கங்களிலும் படர்ந்து செல்லும். எல்லாக் கணுக்களிலுமிருந்து வேர் தோன்றிப் பூமியைப் பற்றிக் கொள்ளும். கிளைக்கொடிகள் எதுவுமில்லை.

அடிக்கொடியிலிருந்தே இலைக் காம்புகள் அனைத்தும் தோன்றுகின்றன. அவை நீரின் மேல் மட்டத்திற்கு மேலே வந்து இலைகளுடன் தோன்றும். ஈரடுக்கு பருமனுள்ள மிக மெல்லிய காம் பொன்றில் முக்கோண வடிவம் உள்ள நான்கு இலைகள் இருப்பதைக் காணலாம்.

இலைகள் மெல்லியதாகவும் வழவழப்பானதாகவும் காணப்படும். இரவில் இந்த இலைகள் நான்கும் ஒன்று சேர்ந்து பறந்து ஒட்டிக் கொள்ளும். காலையில் சூரியன் தோன்றியவுடன் இலைகள் விரிந்து சூரியனை நோக்கியவாறு கிழக்கு நோக்கியும் பகலில் உச்சி நோக்கியும் மாலையில் மேற்கு நோக்கியும் திரும்பிச் செல்வதை தினமும் காணலாம்.

இக் கீரை மழைக்காலம் மாறி பனிக்காலம் ஆரம்பமாகும் போது நிறையக் கிடைக்கும். குளம், குட்டை, ஏரிக்கரை இதுபோன்ற இடங்களிலும் வயல் வரம்புகளிலும் பரம்பல் அதிகம். யாழ்.மாவட்டத்தில் சுதுமலை, தச்சன்தோப்பு, வரணி, அளவெட்டி, திருநெல்வேலி போன்ற இடங்களில் மழைக்காலங்கள் முடிந்தவுடன் அதிக பரம்பலைக் காணலாம். வேருடன் பிடுங்கி தொட்டிகளிலும் வளர்க்கலாம்.

### மருத்துவப் பயன்கள்

இது மிக்க சுவையுடையது. உடலைக் கற்பாத்திரம் போல் ஆக்கி ஆயுளை நீடிக்கச் செய்யும். எந்த நோயுள்ளவர்களுக்கும் இந்தக் கீரை ஏற்றது. இது இரத்தப் போக்கையும் நீரிழிவையும் வெள்ளை சாய்தலையும் நீக்கும் அபார மூலிகையாகும்.

இந்தக் கீரையைத் தொடர்ந்து 40 நாட்கள் உண்டு வந்தால் பித்தம் சம்பந்தமான எல்லா வியாதிகளும் குணமாகும்.


ஆகவே இந்த ஆரைக்கீரையை உணவாகவோ உலர்ந்த தேயிலை போல் வைத்துக் கொண்டு குடிநீர் தயாரித்து பாலுடன் சேர்த்து பருகி வந்தாலோ பல நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்து நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யலாம்.

இக்கீரையை அவையல் அல்லது பருப்புடன் சேர்த்துக் கடைந்து சாப்பிடலாம். உடலுக்கு வன்மையையும் குளிர்ச்சியையும் தரும்.

ஆரைக்கீரையை நிழலில் உலர்த்தி 50g எடுத்து 500 mg தண்ணீரில் போட்டுக் காய்ச்சிய பசுப்பாலும் 200mg, பனங்கற்கண்டும் சேர்த்து காலை, மாலை குடித்து வந்தால் சிறுநீர் அதிகளவு வெளியாதல், சிறுநீரில் இரத்தம் போதல், அதிக தாகம் எல்லாம் நீங்கி உடலுக்கு ஆரோக்கியத்தையும் குளிர்ச்சியையும் கொடுக்கும்.

ஆரைக்கீரையை நிழலில் பொடித்து ஒரு குப்பியில் அடைத்து வைத்துக் கொண்டு தினமும் இரவில் ஒரு தேக்கரண்டி அளவு காய்ச்சிய பால் 200 ml இல் கலந்து கொடுக்க வெள்ளை சாய்தல் நீங்கும், உடலைப் பலப்படுத்தும்.

இந்தக் கீரைக்கு மனநோயைப் போக்கும் தன்மையுண்டு. அதற்கு 1 பங்கு கீரைக்கு நான்கு பங்கு நீர் விட்டு கால் பங்காக சுண்டக்காய்ச்சி 60ml காலை, மாலை பால் சர்க்கரையில் கலந்து குடிக்க மனநோய் குணமாகும். தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிடலாம்.





கண்நோய்கள் தொற்றிப் பரவும் காலத்தில் ஆரைக்கீரையை குடிநீராக்கி அதனால் கண்களைக் கழுவலாம்.

நீரிழிவு நோயாளர்கள் இக்கீரை கிடைக்கும் காலங்களில் வாரத்தில் 3-5 நாட்கள் சமைத்துச் சாப்பிடலாம். அல்லது இக்கீரை கூடுதலாக கிடைக்கும் போது சேமித்து காம்புடன் நிழலில் உலர்த்தி பொடித்து வைத்துக் கொள்ளவும். அரைத் தேக்கரண்டி பொடியை காலை, மாலை ஆடை நீக்கிய பசும்பாலுடன் அருந்தலாம்.

நிழலில் உலர்த்தி பொடித்த ஆரைக்கீரைத் தூளை 2 தொடக்கம் 4 அளவு காலை, மாலை கொடுக்க நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும்.

ஆரைக்கீரைச்சாற்றில் சீரகத்தை ஊறவைத்து உலர்த்திப் பொடித்து தினமும் காலை, மாலை 2g சாப்பிட்டால் இரத்த அழுத்த நோய் வயிற்றுப்புண் குணமாகும்.

ஆரைக்கீரை, தாமரைப்பூ இரண்டையும் சம அளவு எடுத்து 4 g ஏலக்காய் தட்டிப் போட்டு குடிநீர் காய்ச்சி குடித்து வந்தால் இதயம் பலம் பெறும்.

ஆரைக்கீரைச் சாற்றில் வெந்தயத்தை ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் காலை, மாலை இரு வேளை 5g அளவு சாப்பிட்டால் நீரிழிவு நோயை குணமாக்கலாம்.

ஆரைக்கீரைச்சாற்றில் கருஞ்சீரகத்தை ஊற வைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் காலை, மாலை 1 g சாப்பிட்டு வந்தால் தேமல், படை, கரும்படை போன்ற தோல் நோய்கள் குணமாகும்.

அரைக்கீரை சாறு எடுத்து தொடர்ந்து 7 நாட்களுக்கு 15-30 mg அளவு குடித்து வந்தால் நரம்புத் தளர்ச்சி குறையும்.

ஆரைக்கீரைச்சாறு 30mg ஒரு சிறிதுண்டு இஞ்சியைச் சேர்த்து அரைத்துக் குடித்து வந்தால் பித்த நோய்கள் குணமாகும்.

நீரிழிவு நோயாளிகள் தினமும் 4 காம்புடன் கூடிய ஆரைக்கீரையை பிடுங்கி நன்கு கழுவி வாயில் போட்டு மென்று சாப்பிட்டு வரலாம்.

### 100 g ஆரைக்கீரையிலுள்ள சத்துக்கள்

புரதம் - 3.7g, கொழும்பு - 1.4g, நார்ப்பொருள் - 1.3g, காபோவைதரேற்று - 4.6g, கல்சியம் - 5.3g, பொஸ்பரஸ் - 91mg

### ஆரைக்கீரை அடை

ஆரைக்கீரை - 2 கோப்பை, சின்ன வெங்காயம், பூண்டு - பொடியாக அரிந்தது, தேங்காய்த் துருவல் - 2 கப்,சோம்பு - 3 கரண்டி, தக்காளி - 5-பொடியாக அரிந்தது, துவரம் பருப்பு - 100g, கடலைப்பருப்பு - 100g, இஞ்சி - பெரிய துண்டு, காய்ந்த மிளகாய் - 10, புழுங்கல் அரிசி - அரைப்பிடி, உப்பு - தேவையான அளவு.

அரிசியைக் களைந்து ஊற வைத்து இத்துடன் கடலைப்பருப்பு, துவரம்பருப்பு இவைகளையும் ஊறவைக்கவும்.

கிரைண்டரில் ஊறவைத்த அரிசி, பருப்புகளை போடவும். முதலில் மிளகாயை சிறியதாக கிள்ளி கிரைண்டர் குழியில் போடவும். நன்றாக அரைபட்டுக் கொண்டு வரும் போது சோம்பு, இஞ்சியையும் போட்டு உப்புப் போட்டு அரைத்த மாவை ரவை பதத்தில் வழித்து வைக்கவும்.

தேங்காய்த் துருவல், பூண்டு பொடியாக அரிந்து, வெங்காயம் பொடியாக அரிந்து, தக்காளி பொடியாக அரிந்து, ஆரைக்கீரை இவைகள் அனைத்தையும் போட்டு நன்றாக கிளறி விடவும். தோசைக்கல்லில் நெய்யைத் தடவி மாவை ஒரு கரண்டி ஊற்றி வேகவிட்டு மறுபுறம் புரட்டிப் போட்டு இருபுறமும் நெய்யை ஊற்றி எடுத்து சாப்பிடவும்.

இவ்வாறு செய்த ஆரைக்கீரை அடை நன்கு ருசியாகவும் மணமாகவும் இருக்கும். எளிதில் ஜீரணமும் ஆகும். இதன் பயனாக உடற் சூடு, குடற்புண், வாய்ப்புண், வயிற்றுக் கோளாறு இவைகள் யாவும் குணமாகும்.

தாராளமாக மலம் போகும், உடல் குளிர்ச்சியையும் கண்கள் ஒளி பெறும் உடலுக்கு இரும்புச் சத்துக் கிடைக்கும்.

### ஆரைக்கீரை கோப்பிப் பொடி

இலைக்காம்புடன் கூடிய ஆரைக்கீரையை பெற்று அவற்றை நிழலில் உலர்த்தி அம்மியில் அல்லது மிக்ஸியில் தூள் செய்து போத்தலில் அடைத்துக் கொள்ள வேண்டும்.

தேவையான போது இந்தத் தூளை போட்டு ஒரு கொதி வந்ததும் இறக்கி வடிகட்டி நீரிழிவு நோயாளிகள் எனின் கல்லாக்காரத்துடனும் ஏனையவர்கள் சீனி போட்டு காலை, மாலை குடிக்கலாம். இதனால் நீரிழிவு நோயும் பித்தம் சம்பந்தமான நோய்களும் தீரும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 309





"ஆம், குருவே!"

"ஆழ்வார்களின் பாசுரங்களைச் சேகரிப்பதற்கும் பரப்புவதற்கும் மகான்கள் அவதரிப்பார்கள். அதுபோலவே ஆழ்வார்களுடைய பாடல்களில் உள்ள வேத சாரமான தத்துவங்களை நிரூபணம் செய்து, வடமொழியின் மூலம் பரத கண்டமெங்கும் நிலை நாட்டக் கூடிய அவதார மூர்த்திகளும் இந்நாட்டில் ஜனிப்பார்கள். நீயும் நானும் இராஜ்ய சேவையை நமது ஸ்வதர்மமாகக் கொண்டவர்கள். சோழ சக்கரவர்த்தியின் சேவையில் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்வதாக நாம் சபதம் செய்திருப்பதை மறந்தனையோ?.."

"மறக்கவில்லை, குருவே! ஆனால் அது உசிதமா என்ற சந்தேகம் தோன்றி என் உள்ளத்தை அரித்து வருகிறது. முக்கியமாக, தங்களைப் பற்றிச் சில இடங்களில் பேசிக் கொள்வதைக் கேட்டால்."

"என்ன பேசிக் கொள்கிறார்கள்?"

"தங்களுக்குச் சக்கரவர்த்தி பத்து வேலி நிலம் மானியம் விட்டு அதைச் செப்பேட்டிலும் எழுதிக் கொடுத்திருப்பதால் தாங்கள் வைஷ்ணவ சம்பிரதாயத்தை விட்டுவிட்டதாகச் சிலர் சொல்கிறார்கள். ஜாதி தர்மத்தைப் புறக்கணித்துக் கப்பல் பிரயாணம் செய்ததாகவும் கூறுகிறார்கள்."

"அந்தப் பொறாமைக்காரர்கள் சொல்வதை நீ பொருட்படுத்த வேண்டாம். நம்முடைய ஜாதி கிணற்றுத் தவளைகளாக இருக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். சக்கரவர்த்தி எனக்குப் பத்து வேலி நிலம் மானியம் கொடுத்திருப்பது உண்மைதான். அதைச் செப்பேட்டிலும் எழுதிக் கொடுத்திருக்கிறார். ஆனால் அதற்கு நாலு வருஷங்களுக்கு முன்பே சக்கரவர்த்திக்கு நான் மந்திரியானேன் என்பது உனக்குத் தெரியும் அல்லவா?"

ஆழ்வார்க்கடியான் மௌனமாயிருந்தான்.

"சக்கரவர்த்திக்கும் எனக்கும் எப்போது நட்பு ஏற்பட்டது என்றாவது உனக்குத் தெரியுமா? நாங்கள் இருவரும் இளம்பிராயத்தில் ஒரே ஆசிரியரிடம் பாடங்கற்றோம். செந்தமிழும் வடமொழியும் பயின்றோம். கணிதம், வான சாஸ்திரம், தர்க்கம், வியாகரணம் எல்லாம் படித்தோம். அப்போதெல்லாம் சுந்தர சோழர் சிம்மாசனம் ஏறப் போகிறார் என்று யாரும் கனவிலும் எண்ணியதில்லை. அவராவது, நானாவது அதைப் பற்றிச் சிந்தித்ததே கிடையாது. இராஜாதித்தரும் கண்டராதித்தரும் காலமாகி அரிஞ்சய சோழர் பட்டத்துக்கு வருவார் என்று யார் நினைத்தது? அரிஞ்சயருக்கு அவ்வளவு விரைவில் துர்மரணம் சம்பவித்துச் சுந்தர சோழர் பட்டத்துக்கு வரும்படியிருக்கும் என்று தான் யார் நினைத்தார்கள்? சுந்தர சோழர் சிம்மாசனம் ஏறியபோது அதனால் பல சிக்கல்கள் விளையும் என்று எதிர்பார்த்தார். உடனிருந்து நான் உதவுவதாயிருந்தால் பட்டத்தை ஒப்புக்கொள்வதாகவும் இல்லாவிட்டால் மறுத்துவிடுவதாகவும் கூறினார். இராஜ்ய நிர்வாகத்தில் அவருக்கு உதவுவதாக அப்போது வாக்களித்தேன். அந்த வாக்குறுதியை இன்றளவும் நிறைவேற்றி வருகிறேன். இதெல்லாம் உனக்குத் தெரியாதா, திருமலை?"

"எனக்குத் தெரியும், குருதேவா! என் ஒருவனுக்கு மட்டும் தெரிந்து என்ன பயன்? ஜனங்களுக்குத் தெரியாது தானே? நாட்டிலும் நகரத்திலும் வம்பு பேசுகிறவர்களுக்குத் தெரியாது தானே"

"வம்பு பேசுகிறவர்களைப் பற்றி நீ சிறிதும் கவலைப்படவேண்டாம். பரம்பரையான ஆச்சாரியத் தொழிலை விட்டுவிட்டு நான் இராஜ சேவையில் இறங்கியது பற்றி இதற்கு முன்னால் நானே சில சமயம் குழப்பமடைந்ததுண்டு. ஆனால் சென்ற இரண்டு நாட்களாக அத்தகைய குழப்பம் எனக்குச் சிறிதும் இல்லை. திருமலை! நான் இராமேசுவர ஆலயத்தில் சுவாமி தரிசனத்துக்காக இங்கு வரவில்லை என்பதும் மாதோட்டம் போவதற்காகவே இங்கு வந்தேன் என்பதும் உனக்குத் தெரியும் அல்லவா?"

"அப்படித்தான் ஊகித்தேன், குருதேவரே!"

"நீ ஊகித்தது சரியே, அன்றைக்குச் சம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் பரவசமாக வர்ணித்தபடியேதான் இன்றைக்கும் பாலாவி நதிக் கரையில் மாதோட்டம் இருக்கிறது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மீண்டும் மீண்டுமா ஏமாந்து போன திருடன்

(நேற்றைய தொடர்ச்சி)

அவனிடம், நான் இதில் விவசாயம் செய்ய போகிறேன் என்று நீங்கள் நினைத்து விட்டீர்களா? அதுதான் இல்லை. இந்த நிலத்தை என் முன்னோர்கள் காலத்தில் இருந்தே வைத்துள்ளார்கள்.





அவர்கள் சேர்த்து வைத்த பெரும் புதையல் இந்த நிலத்தில் இருப்பதாக சொன்னார்கள். என் கணவரும் புதையல் எந்த இடத்தில் இருக்கும் என்ற குறிப்பையும் கண்டுபிடித்து விட்டார். யாராவது புதையலை விட்டு முட்டாள் தனமாக கொஞ்ச பணத்திற்காக நிலத்தை விற்பார்களா? என்றாள் மாயா.

திருடனோ சிறு புன்னகை செய்துவிட்டு, ஆமாம் நீயே வைத்துக்கொள். அது உனக்கு சொந்தமானது என்று கூறி விட்டு அங்கிருந்து நகர்ந்தான். அவன் மனதுக்குள் முட்டாள் பெண் யாராவது புதையல் இருக்கு என்பதை வெளியே கூறுவார்களா என நினைத்து கொண்டே இரவுக்காக காத்திருந்தான்.

மாயா பொழுது சாய்ந்ததும் கடப்பாரை, மண் வெட்டியை எடுத்து வீட்டுக்கு புறப்பட்டாள். கிராமமே அமைதியாக ஆனது. திருடன் நிலத்தின் வழியாக கோவிலில் திருட செல்வதை விட, இந்த புதையலை எடுத்து விட்டால் வாழ்நாள் முழுவதும் நிம்மதியாக வாழலாம் என திட்டம் போட்டான்.

திருடன் நிலத்தின் ஒரு மூலை முடுக்கில்லாமல் தோண்டினான். எங்கு தேடியும் எந்த புதையலும் கிடைக்கவில்லை. சூரியன் வர தொடங்கியது, இதற்குமேல் இங்கு இருந்தால் ஆபத்து என எண்ணி அங்கிருந்து சென்று விட்டான்.

காலையில் நிலத்திற்கு வந்த மாயா எதிர்பார்த்தது போலவே நிலம் செம்மையாக விதைப்பதற்கு ஏதுவாக இருந்தது. அவன் மேல் இருந்த சந்தேகத்தை அவள் வேறு வழியில் பயன்படுத்தி கொண்டாள்.

விதைகளை விதைத்து, நல்ல விளைச்சல் பெற்றாள். இப்போது அவளுக்கு நகைகள், சேர்த்து வைக்க பணம் என ஏழ்மையில் இருந்து விலகினாள். ஏமாந்து போனான் திருடன்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் அநீதி கண்டு கோபமும் வெறுப்பும் கொண்டு நீ குமுறி எழுவாயானால் நாம் இருவரும் தோழர்களே. – சே குவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்கள் வேடிக்கை பார்த்தால் சண்டித்தனம் சன்னதமாடும்

முன்பெல்லாம் ஊரில், உறவில், தெருவில் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதனை ஆய்ந்து யார் பக்கம் நியாயம் இருக்கிறதோ! அதனை வெளிப்படையாகக் கூறுகின்ற மக்கள் சமூகம் இருந்தது.

ஆனால் இப்போது நிலைமை அதுவன்று. எங்கேனும் பிரச்சினை ஏற்பட்டால் அல்லது பலர் சேர்ந்து ஒருவரைத் தாக்கினால், அதனை வேடிக்கை பார்க்கின்ற நிலைமையே காணப்படுகிறது.

இதனால் சண்டித்தனங்கள் எங்கும் சன்னதமாடத் தலைப்பட்டுள்ளன.

உதாரணத்துக்கு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (14) பாதுகாப்பு ஊழியர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து பார்வையாளர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் சமூகவலைத்தளங்களில் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

ஆம், யாழ்.போதனா வைத்தியசாலையின் நுழைவாயிலில் வைத்து; பார்வையாளர் ஒருவரை வைத்தியசாலையின் பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் தனியார் பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்தவர்கள் தாக்கிய சம்பவத்தைப் பார்க்கும்போது இஃதென்ன அநியாயம் என்று நினைக்காதவர்கள் எவரும் இருக்க முடியாது.

அந்தளவுக்கு அந்த நபரை பாதுகாப்பு ஊழியர்கள் கையாலும் காலாலும் அடித்துள்ளனர்.

இருந்தும் அங்கு நின்ற எவரும் அதுபற்றித் தட்டிக் கேட்கவில்லை.

அடிப்பவர்களைப் பிடித்து விடுவது அல்லது விழுந்தவரைத் தூக்கி விடுவது என்பது வேறு.

மாறாக யாழ்.போதனா வைத்தியசாலை ஒரு பொது இடம். எதற்காக நீங்கள் அவரை அடிக்கின்றீர்கள். உங்களுக்கு அடிக்கின்ற அதிகாரம் தந்தது யார் என்று வீரத்தோடு யாரேனும் கேட்டிருந்தால், அந்தக் கேள்வியை ஒருவர் இருவர் என்றில்லாமல் பலரும் கேட்டிருந்தால், சண்டித்தனம் செய்தவர்கள் அடங்கியிருப்பர்.

என்ன? செய்வது தட்டிக்கேட்க ஆளில்லை என்றபோது, அதர்மத்தனமான சண்டித்தனங்கள் எழுந்தாடவே செய்யும்.

இதை நாம் கூறும்போது பிரஸ்தாப பார்வையாளர் என்ன செய்தார் என்று அறிவதும் அவசியமல்லவா என்று யாரேனும் கேட்டால் அதில் நியாயம் இருக்கிறது.

ஆனால் என்னதான் இருந்தாலும் பாதுகாப்பு ஊழியர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளரைப் பார்க்க வந்த ஒருவரைக் கையாலும் காலாலும் அடிப்பதென்பது ஈனத்தனமான செயல்.

அவர் பிழை செய்திருந்தால் அதற்குரிய சட்டநடவடிக்கைகளை எடுப்பதே முறை.

அவ்வாறான நடைமுறைகளை குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் சார்ந்த தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனம் வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால் அந்த நிறுவனம் அந்தப் பயிற்சியை வழங்கவில்லை என்றுணர முடிகிறது.

எது எவ்வாறாயினும் அநீதி கண்டு பொது மக்கள் கொதித்தெழ வேண்டும்.

அந்த இடத்தில் நியாயம் கேட்க வேண்டும். இதைச் செய்யாதவரை அப்பாவி மக்களை அடித்து விழுத்தி உதைக்கின்ற ஒரு சண்டித்தனக் கலாசாரம் நம் மண்ணில் தொற்று நோய் போல தொடரவே செய்யும்.

# இறக்குமதித் தடை நீக்கம்

## டொலர் கையிருப்பில் தாக்கம் செலுத்தும்

### கொழும்பு பல்கலைக்கழகம்

(கொழும்பு)

இறக்குமதிக்கான தடை நீக்கப்பட்டுள்ளதன் காரணமாக இறக்குமதிகள் அதிகரிக்கப் போகின்றன. அத்துடன் இலங்கை ரூபாவினுடைய தேய்வும் ஆரம்பமாகும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக அரசாங்கம் பல பொருட்களுக்கு இறக்குமதி தடையை விதித்திருந்தது. இதனை தற்போது அரசாங்கம் தளர்த்துவதாக அறிவித்திருந்தாலும் கூட இதன் பின்னணியிலே இருப்பது சர்வதேச நாணய நிதியத்தினுடைய நிபந்தனை ஆகும்.

இப்போது இறக்குமதிக்கான தடை நீக்கப்பட்டுள்ளதன் காரணமாக வழமை போன்று இறக்கு மதிகள் அதிகரிக்கின்றன.

இறக்குமதிகள் அதிகரிக்கின்ற போது டொலருக்கான கேள்வி அதிகரிக்கும். அவ்வாறு டொலருக்கான கேள்வி அதிகரிக்கின்ற போது டொலருக்கான விலையும் அதிகரிக்கும். இலங்கை ரூபாவினுடைய தேய்வு ஆரம்பமாகும்.

அதனை நாங்கள் இப்போதிருந்தே நிகழ ஆரம்பித்திருப்பதை காணலாம். சிறிது சிறிதாக ரூபாவுக்கு எதிராக டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்வதை அண்மைய நாட்களில் காணக்கூடியதாக உள்ளது.

எதிர்காலத்தில் பெரிய அளவில் இறக்குமதிகள் அதிகரிக்குமாக இருந்தால் டொலருக்கான கேள்வி அதிகரிக்கும். நிச்சயமாக நாட்டினுடைய டொலர் கையிருப்பிலும் இது தாக்கத்தைச் செலுத்தும் என தெரிவித்துள்ளார். (நி)

## அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கும்- மகிந்தானந்த

(கொழும்பு)

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி பகுதியில் நேற்றையதினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைப்பதற்கு ஏற்கனவே பல நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.எனவே, அடுத்த மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்: (நி)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச கலா சார பேரவையினால் வருடம் தோறும் கலாசார விழாவில் வழுங்கப்படும் மூத்த மற்றும் இளம் கலைஞர்களுக்கான கலைவிருதான செம்புலக்குரிசில் மற்றும் செம் புல இளங்குரிசில் விருதுகள் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கலாசார பேரவையினால் கோரப்பட்டுள்ளன.

குறித்த விருதுகளுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் சுற்றறிக் கையினை வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக வெளிக்களக்கிளையின் கலாசார பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும் :

அத்துடன் விண்ணப்பங்கள் யாவும் எதிர் வரும் 25.10.2023ஆம் திகதிக்கு பிந்தாமல் பிரதேச் கலாசார உத்தியோகத்தருக்கு கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கோப்பாய் பிரதேச செயலக செயலாளர் திருமதி.சுபாஜினி மதியழகன் அறிவித்துள்ளார். (நி-6)

## விவசாயிகளுக்கும் மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய் விநியோகம்

### நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் யாழில் தெரிவிப்பு

(அராலி)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 2024 பாதீட்டில் மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய் பெற்றுக் கொடுப்பதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விவசாயிகள் சார்பில் முன்வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மீனவர்களுக்கு மாநில அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுவது போல் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும் என விவசாயிகள் சார்பில் கோரிக்கை முன்வைப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மகிந்த அமரவீர எதிர்வரும் வருடம் 2024 பாதீட்டில் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் மானிய அடிப்படையில் வழங்குவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் பி.எஸ். எம். சாள்ஸ், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபால சுந்தரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்து லசேன, மேலதிக அரசாங்க அதிபர்களான பிரதீபன் மற்றும் ஸ்ரீமோகன், பிரதேச செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-6-104)

## சிங்கள கடற்படையின் அத்துமீறலுக்கு விரைவில் முடிவு கட்டுங்கள் - அன்புமணி ராமதாஸ்

(சென்னை)

நெடுந்தீவு கடற் பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் கைது செய்யப்பட்டமை கண்டிக்கத்தக்கது எனவும் சிங்களப் படையினரின் அத்துமீறலுக்கு முடிவு கட்ட வேண்டும் எனவும் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து வங்கக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 15 பேரை சிங்களக் கடற்படையினர் கச்சதீவு பகுதியில் கைது செய்திருக்கின்றனர். அவர்களின் இரு விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து சிங்களக் கடற்படையினர் நிகழ்த்தியுள்ள இந்த அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது. வங்கக் கடலில் தமிழக மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கக் கூடாது என்ற நயவஞ்சக எண்ணத்துடன் தான் சிங்களக் கடற்படையினர் இத்தகைய கைது நடவடிக் கைகளில் ஈடுபடு கின்றனர்.

ஒருபுறம் தமிழக மீனவர்கள் மீது கடல் கொள்ளையர்களைக் கொண்டு தாக்குதல் நடத்துதல், இன்னொரு புறம் மீனவர்களை கைது செய்து, அவர்களின் படகுகளை பறிமுதல் செய்தல் என இருமுனைத் தாக்குதலை இலங்கை நடத்தி வருகிறது. இதனால், தமிழக மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இலங்கை அரசுக்கு இந்தியாதான் உதவிகளை வழங்கி வருகிறது. இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன் நாகை - காங்கேசன் துறைமுகம் இடையே கப்பல் போக்குவரத்தையும் இந்தியா தொடங்கியுள்ளது.

ஆனால், இந்தியாவின் நல்லெண்ண நடவடிக்கைகளை புரிந்து கொள்ளாத இலங்கை அரசு, மீனவர்களை தாக்கியும் கைது செய்தும் இந்தியாவின் இறையாண்மைக்கு சவால் விடுத்து வருகிறது.

சிங்களக் கடற்படையினரின் அத்துமீறலுக்கு முடிவு கட்ட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்கள் அவர்களின் பாரம்பரியமான மீன்பிடி பகுதிகளில் தடையின்றி மீன் பிடிப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலையும் கைது நடவடிக்கைகளையும் கைவிடும்படி இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும். கைது செய்யப்பட்டுள்ள 15 மீனவர்களையும் இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து படகுகளையும் விடுவிப்பதற்கும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

12



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பின்னர் யாழ் பாடியின் வரவுக்கு முன்னரே வன்னியர்களின் குடியேற்றம் பற்றியும் பேசப்படுகிறது.

யாழ்பாடிக்குப்பின் யாழ்ப்பாணத்திலேற்பட்ட குழப்ப நிலையைத் தொடர்ந்து, தென்னிந்தியாவிலிருந்து, கூழங்கைச் சக்கரவர்த்தி அழைத்துவரப்பட்டமை, நல்லூர் இராஜதானியின் தோற்றம், யாழ்ப்பாணத்தில் மேலும் தமிழர்களின் குடியேற்றம், என்பவற்றை விபரிக்கும் இந்நூல், தொடர்ந்து இந் நாட்டையாண்ட மன்னர்கள் பற்றியும் அவர்கள் காலத்தில் நடந்த முக்கிய சில சம்பவங்கள் பற்றியும் சுருக்கமாக விபரந்தருகிறது. போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைய முன் நடந்த சம்பவங்களிலும் காலப் பகுதிகளிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

போர்த்துக்கேயர் ஆட்சி பற்றியும், பின்னர் அவர்களின் வீழ்ச்சி பற்றியும் கூறும் இந்நூல், ஒல்லாந்தரின் ஆட்சி பற்றியும் ஓரளவு கூறி நிறைவு பெறுகிறது.

ஒல்லாந்தர் ஆட்சியின் போது அவ்வரசின் அதிகாரியொருவரின் வேண்டுகோளின் பேரில் எழுதப்பட்ட இந்நூலில் காணப்படும் ஒல்லாந்தர் ஆட்சி பற்றிய சில கடுமையான விமர்சனங்களும், பிரித்தானியர் ஆட்சி பற்றி வருகின்ற பகுதிகளும், பிற் காலத்தில் சேர்க்கப்பட்டவை என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும்.

யாழ்ப்பாண வரலாற்று ஆய்வாளர்கள் அனைவரும், அதனையாண்ட அரசர்கள் பட்டியலுக்கு, யாழ்ப்பாண வைபவமாலையையே முக்கிய ஆதாரமாகக் கொண்டுள்ளனர். எனினும் யாழ்ப்பாண வைபவமாலை தரும் அவர்களது காலம் பற்றிய தகவல்கள், கிடைக்கக் கூடிய ஏனைய தகவல்களுடன் பொருந்திவராமையினால், வெவ்வேறு ஆய்வாளர்களுடைய முடிவுகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. கீழேயுள்ள பட்டியல் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (ஞான) எழுதி 1928இல் வெளியிடப்பட்ட யாழ்ப்பாண வைபவவிமர்சனம், மற்றும் 1926இல் வெளிவந்த, முதலியார் செ.இராசநாயகம் (இராச) அவர்களுடைய பழங் காயாழ்ப்பாணம் (Ancient Jaffna) என்ற ஆங்கில நூல் ஆகியவற்றில் காணப்படும் காலக் கணிப்பைத் தருகிறது.

சரித்திரகாலத்துக்கு முந்திய யாழ்ப்பாணத்தைப்பற்றி "இலங்கை வாழ் தமிழர் வரலாறு" நூலிலிருந்து .......

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட "இலங்கை வாழ் தமிழர் வரலாறு" என்னும் நூலில் சரித்திரகாலத்துக்கு முந்திய யாழ்ப்பாணத்தை பின்வருமாறு கூறுகிறார்.

இராமாயணத்தினின்று இலங்கை இராவணனால் ஆழப்பட்டு வந்த நாடு என அறிகின்றோம். இராவணன் அசுரவம்சத்தைச் சேர்ந்தவன். ஆரியர் இந்தியாவுக்கு வந்த போது தாசர் என்னுஞ் சாதியாரோடு போராடினர் என இருக்கு வேதம் முதலியவற்றால் அறிகின்றோம். அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த நாகசாதியினரையே ஆரியர், 'அசுரர்' என்றும் 'தாசர்' என்றும் அழைத்தனர் என்பது அறிஞர் கருத்து. நாகர் என்னும் பெயர் வேதங்களில் வழங்கப்படவில்லை. எனினும், இருக்குவேதத்தில் அசுரர் அல்லது தாசரைப்பற்றிப் பேசுமிடத்து, 'அஹி' (பாம்பு) என்ற சொல் வருகின்றது.

"விருத்திரனை இந்திரன் வச்சிராயுதத்தினால் அடித்தபோது, வெட்டி வீழ்த்தப்பட்ட மரம் போல் அஹி என்பான் வீழ்ந்து கிடந்தான்" இதினின்றும், பிறசான்றுகளினின்றும், நாகரை அசுரரென அழைத்தல் வழக்கமாய் இருந்ததெனத் தெரிகின்றது.

அடுத்து, புராண காலத்தில் நாக அரசர்கள் கடலுக்குக் கீழேயுள்ள பாதாளத்திலிருந்து அரசாண்டனர் எனப் புராணங்கள் கூறும். இக்குவாகுவின் மகனான அரியாசவன் என்பான் மகள் யாதுவை, தூயவர்மன் எனும் நாக அரசன் கடலுக்குக் கீழேயுள்ள நாட்டிற்குக் கொண்டு சென்றான் எனவும், அந்நாட்டின் பெயர் 'இரதினத்துவீபம்' எனவும், அந்நாட்டிலுள்ளோர் நாவாய் பல வைத்திருந்தனர் எனவும், அவர் கடல் வணிகஞ் செய்தனர் எனவும், முத்துக் குளித்தனர் எனவும் அரிவமிசம் என்னும் புராண நூல் நவிலும். அசுரர் என்பார் திராவிடரென ஆராய்ச்சியாளர் முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

கௌதம புத்தர் மூன்று முறை இலங்கைக்கு வந்ததாக மகாவம்சம் கூறும். முதன்முறை மகியங்கனை என்னும் இடத்திற்கும், இரண்டாம் முறை நாகதீபத்துக்கும், மூன்றாம் முறை கல்யாணி என்ற பெயருடைய களனி என்னும் இடத்துக்கும் வந்தார் எனவும், நாகதீபத்திலும் கல்யாணியிலும் நாகர்வசித்தனர் எனவும், நாகதீபத்திலுள்ள அரச குடும்பத்தில் அரசுகட்டில் ஒன்றன் பொருட்டாக ஏற்பட்ட குழப்பத்தைத் தீர்ப்பதற்காக வந்தார் எனவும் அந்நூல் நவிலும். மேலும் நாகதீபத்தில் உள்ள அரச குடும்பத்தின் உறவினர் கல்யாணியில் இருந்தனரெனவும் அப் பாளி நூல் கூறும்.

இதனின்றும், இலங்கையின் ஒரு பெரும் பிரிவில், பண்டைக் காலத்தில் நாகர்குடி பரவியிருந்ததெனத் தெரிகின்றது. இக்கருத்தினை, கி. பி. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டளவில் எழுந்த மணிமேகலையும் வலியுறுத்தும். வட இலங்கையிலுள்ள நாகர் குடியிருப்பிற்குப் பண்டைய நாட்களில் தலைநகராய் இருந்தது கந்தரோடை என்னும் நகர் என ஆராய்ச்சியாளர் கருதுவர்.

மேலும் இந்தியாவிலிருந்து சங்கமித்தை புத்தகாயாவிலிருந்த புனித வெள்ளரசக்கிளையை இலங்கைக்குக் கொண்டுவந்த போது இலங்கையின் வடபகுதியிலுள்ள சம்புகோளம் என்னுந் துறையில் வந்திறங்கினாள் என மகாவம்சம் கூறும்.

பண்டைக்காலத்தில் வட இலங்கை கிரேக்க உரோமர்களோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. இந்த உண்மை அங்கு கண்டெடுத்த கிரேக்க உரோம நாணயங்களினால் தெரிகின்றது.

நாகதீபமென்னும் பகுதி எங்குள்ளதெனச் சரித்திர ஆராய்ச்சியாளர் தடுமாறியிருக்கையில் வல்லிபுரக் கோயிலிலே செப்பேட்டுச் சாசனம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதன்படி வட இலங்கையையே பண்டைக் காலத்தில் நாகதீபமெனக் குறித்தனர் எனத் தெரிந்தது. விசயன் பிறப்பதற்கு முன்னரேயே நாகதீபம் (வடஇலங்கை) மிகவும் செழிப்புள்ள பெரிய வணிகத்தலமாக விளங்கியது. பின்னர் இவ்வடபகுதியில் வாழ்ந்த நாகசாதியினர் காலத்துக்குக் காலம் தமிழரோடு கலப்பாராயினர்.

அதனால் அண்மையிலிருக்கும் தமிழகத்திலிருந்து பலகுடிகள் வந்திறங்கின. காலப்போக்கில் வட இலங்கை தமிழக் குடியிருப்பாக மாறியது. பல்லவ காலத்தில் வாழ்ந்த சைவநாயன்மார் இலங்கையின் வடபகுதியிலுள்ள திருக்கேதீச்சரம், திருகோணமலை ஆகிய தலங்களைப் பாடியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. சைவசமயத்தை மேற்கொண்டொழுகிய தமிழர் இப்பகுதிகளில் வாழ்ந்தனர் என்பது இதனால் அறியப்படுகின்றது.

இதுவரை பெரும்பாலும் புராண வரலாறுகளைக் கொண்டும் மகாவம்சத்தில் சொல்லப்பட்டவற்றைக் கொண்டும் கர்ணபரம்பரைக் கதைகளைச் சேர்த்தும் ஒருவாறு இப் பகுதியின் பழைய வரலாற்றைத் தொகுத்துக் கூறியிருந்தார்.

மேலும் அவர் தன் நூலில், பண்டைக்காலத்திலே, வட இலங்கை நாகசாதியினர் குடியிருப்பாக இருந்த காலத்து, சிங்கைபுரம் அல்லது சிங்கைநகர் என்று பெயர் கொண்டு விளங்கிய நகரத்திலே கலிங்கதேசத்திலிருந்து வந்து குடியேறிய குடும்பங்கள் சில வாழ்ந்து வந்தன. உத்தரப் பிரதேசமென்று மகாவம்சம் குறிப்பிடும் இப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய தமிழ்க் குடும்பங்கள் பல வாழ்ந்து வந்தன. இக்காலப் பகுதியில் சிங்கள அரசர்கள் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையின் பிற பகுதிகளை ஆண்டு வந்தனர்.

மகாவம்சம் எடுத்து மொழிந்த அரசபரம்பரையின் வரலாற்றைத் தொடர்ந்து கூறும் சூளவம்சம் மேலும் 'ஆறு இராசாக்கள் காலம்' என்னும் பிரிவில் இவ்வுத்தரப் பிரதேசத்தில் கலகங்கள் முறைக்கு முறையெழுந்தன வெனவும், அவற்றை அனுராதபுரத்திலிருந்து அரசாண்ட அரசரின் சேனைகள் அங்குப் போய் அடக்கி வந்தனவெனவும் இயம்பும். சீலமேகன் என்னும் சிங்கள அரசன் மகன் மகிந்தன் என்பான் மாதோட்டத்தில் எழுந்த புரட்சியை அடக்கி, உத்தர தேசத்தைத் தனது ஆணைக்குள் ஆக்கினான் என அந்நூல் கூறும்.

இவ்வாறு குறிப்பிடுங் காலத்திலே கலிங்க தேசத்தினின்று வந்து வட இலங்கையிற் குடியேறிய குடும்பங்களுக்கு உக்கிரசிங்கனென்பான் தலைவனாக இருந்தான் என ஊகிக்கக் கிடக்கின்றது. இவனைக் குறித்து யாழ்ப்பாண வைவமாலையும், கைலாய மாலையும் எடுத்து மொழியுமேயன்றித் தென்னிந்திய வரலாறோ, சூளவம்சமோ, கல்வெட்டுக்களோ யாதுங் கூறா குறித்த உக்கிரசிங்கன் தன் காலத்து வாழ்ந்த ஏனைய உத்தர தேசத் தலைவரோடு சேர்ந்து அனுராதபுரத்திலிருந்தாண்ட சிங்கள அரசருக் கெதிராகக் கலகங்கள் விளைத்துத் திரிந்தான் என எண்ண இடமுண்டு.

சூளவம்சம் உத்தரப்பிரதேசத்தைப் பற்றியும் தமிழரைப் பற்றியும் தருங் குறிப்புக்களைப் பார்க்கும் பொழுது வட இலங்கைக்கும் தனியரசொன்று இருந்ததென நாம் ஊகிக்கக் கிடக்கின்றது.

அக்காலத்திலும் தமிழ்த் தலைவர்கள் அனுராதபுர அரசின்கீழ் மிகுந்த செல்வாக்குப் பெற்ற பிரதானிகளாயிருந்து ஆட்சி செலுத்தினரென்பது சூளவமிசத்திற் காணப்படும் பொத்தக் குட்டன் என்பான் வரலாற்றினின்றும் தெரிகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

வேண்டும் என்றும் கூக்குரல் இடுகின்றனர்.

ஆனால், தமிழ் மக்கள் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் சுதந்திரமாக வாழ்கின்றார்கள்."

இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கையில் எந்தவொரு இடமும் தமிழர்களுக்குச் சொந்தம் அல்ல. ஆனால், நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் அவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்குப் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்கள் அனுமதியளித்துள்ளார்கள். இதனைச் சர்வதேச சமூகம் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது என்று செய்திகள் உலாவுகின்றன. இந்தப் பிரேரணைகள், தீர்மானங்கள் எதற்கு? நாட்டின் இறையாண்மையை மீறிய இப்படியான செயற்பாடுகள்தான் இலங்கையில் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் இன மோதலுக்கு வழிவகுக்கும்.

எனவே, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றும் வெளிநாடுகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளின் சொல்லைக் கேட்டு வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புகளும் செயற்படக்கூடாது" என்றார். (7)



















## எந்தப் பிரேரணை...

மைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் முறைமையில் திருத்தம் செய்வதற்கான யோசனையை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்திருந்ததுடன், இதனால் நாட்டில் பல்வேறு கருத்தாடல்களும் சர்ச்சைகளும் எழுந்துள்ளன.

பிரேரணையின் உள்ளடக்கம் குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர், 160 உறுப்பினர்களை தொகுதிவாரி முறையிலும் எஞ்சிய 65 உறுப்பினர்களை விகிதாசார முறையிலும் தெரிவு செய்வதற்கான பிரேரணையையே அமைச்சரவையில் சமர்ப்பித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான பாராளுமன்றக் குழு ஒன்றை அமைப்பதற்கும் இந்த யோசனையில் முன்மொழியப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் குறித்த பாராளுமன்ற தேர்தல் முறை திருத்தம் தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி அவர்களது யோசனைகளையும் உள்வாங்க எதிர்பார்ப்பதாகவும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இதனால் பாதிக்கப்படாது எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (7)

## பசிலின்...

ஜன பெரமுனவும் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் இந்த விடயம் தொடர்பில் ஆழமான கருத்தாடல்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதன் பிரகாரம்தான் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக வலுவான இடத்தைப் பெறுவது பசிலின் திட்டமாக உள்ளது.

அதன்படி, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதே இந்த நேரத்தில் சிறந்த தெரிவு என்பது பசிலின் முன்மொழிவாகும் என பிரதான எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் ஏற்கெனவே பல சந்தர்ப்பங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

சர்வஜன வாக்கெடுப்புமூலம் அதனை நீக்குவது இலகுவானது எனவும், அதன் பின்னர் நிறைவேற்று முறைமை அவசியமா என மக்களிடம் கேட்க முடியும் எனவும் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதன் பின்னர் பிரதமர் தலைமையிலான பாராளுமன்ற முறைமைக்கு செல்ல முடியும் என பசில் ஜனாதிபதியிடம் விளக்கமளித்துள்ளார். அதன் பிரகாரமே பாராளுமன்றில் நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிறைவேற்று முறைமையை இல்லாதொழிக்க தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அதனை ஐக்கிய மக்கள் சக்தியாலும் தேசிய மக்கள் சக்தியாலும் எதிர்க்க முடியாது என்பது பசிலின் திட்டமாகும்.

அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து அல்லது தனித்தனியாகப் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்குள் குறிப்பிடத்தக்களவு இடத்தை பெற முடியும் என்பது பசிலின் கணிப்பாக உள்ளது.

பசில் பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியை சந்தித்து இந்த அரசியல் குண்டை வீசியதற்கு இதுவே காரணம். பசிலின் கைப்பொம்மைபோல ரணில் செயற்பட ஆரம்பித்தால் நிச்சயம் எதிர் விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும்எதிர்க்கட்சிகள் எச்சரித்துள்ளன. (7)

## அடுத்த வாரம்...

இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரிக்கொள்கை போன்று பிற பொருளாதாரக் காரணிகள் குறித்தும் இதன் போது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் உதவி தொடர்பில் அடுத்த வாரத்தில் இறுதித் தீர்மானத்துக்கு வரக்கூடியதாக இருக்குமென அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கடன் மறுசீரமைப்புக் குறித்து சீனா சாதகமான பதிலை வழங்கியுள்ளதால் இந்த பேச்சுவார்த்தை மேலும் சாதகமாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான கடன் தொகையின் இரண்டாம் தவணையில் சுமார் 334 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கலந்துரையாடலைத் தொடர்ந்து நாணய நிதியத்தினால் வழங்கப்படும் ஆலோசனைகளை பொறுத்தே, நவம்பர் மாதத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்மொழியப்படும் என அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (7)

## யாழ்ப்பாணம்...

பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இந்தியாவின் நாகபட்டினம் துறைமுகம் - காங்கேசன் துறைமுகம் வரை பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் காணொளி காட்சி வாயிலாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இந்தியாவில் இருந்து 50 பேரும் காங்கேசன்துறையிலிருந்து 30 பேரும் கப்பலில் பயணம் செய்தனர். இந்நிலையில் நேற்று போதிய அளவு ரிக்கெட் முன்பதிவு இல்லாத காரணத்தினால் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை ரத்து செய்யப்படுவதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது.

மேலும் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்கள் மட்டும் தற்பொழுது கப்பல் இயக்கப்பட உள்ளது. (ம-7,33)




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



எமது பல்கலைக்கழக நண்பியும், மடு கல்வி வலய வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகருமான திருமதி **மேரி அன்சலா ஸ்ரான்லின்** அவர்களின் அன்புத் தந்தை

அமரர்
## யோவான் நீக்கிலாஸ்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(C-7432)

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
**யாழ்.பல்கலைக்கழக 95/96 நண்பர்கள்**


# விசா விண்ணப்பம்

**கனடா | பிரான்ஸ் | லண்டன்**

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா,பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

**குறிப்பு - இந்தியா, கனடா நாடுகளுக்கிடையேயான பனிப் போர் காரணமாக இலங்கைப் பிரஜைகளுக்கே வேலைவாய்ப்பு அதிகம்**

ருமேனியா,சேர்பியா, கனடா, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத்தரப்படும்.

**உங்களிடம் கனடா நாட்டிற்கான பொன்சர் இல்லையா?**
**கவலையை விடுங்கள் அதை எம்மிடமே பெற்றுக்கொள்ளலாம்.**

தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.

**NSA Group of Company (Pvt) Ltd.**
**197, Main Street, Jaffna.**


(17476)

**077 266 6429, 021 221 0599, 077 877 4838**

குறிப்பிட்ட பொன்சர் மாத்திரமே கையிருப்பில் உள்ளன.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 05 . 03 . 1947



உதிர்வு 17 . 09 . 2023

(C-7433)

*அமரர்.* **நாகமுத்து**
## சந்திரகாந்தன் (செல்வானந்தம்)
**(ஓய்வு பெற்ற சுங்க இலாகா அதிகாரி)**

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 17.10.2023 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 6 மணியளவில் கீரிமலையில் அஸ்தி கரைக்கப்படும். அதனை தொடர்ந்து 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

074 385 6381

தகவல் : குடும்பத்தினர்

# மோட்டார் ஷெல் முல்லையில் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஆண்டாங்குளம் பகுதியில் ஷெல் ஒன்று மீடகப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆண்டாங்குளம் பகுதியிலுள்ள வீட்டு காணியிலிருந்து வெடி குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆண்டாங்குளம் பகுதியிலுள்ள வீட்டுக்காணி ஒன்றினை உரிமையாளரினால் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது காணியில் மோட்டார் ஷெல் இருந்துள்ளதை கண்டுள்ளார். இதையடுத்து முல்லைத்தீவு பொலிஸாருக்கு வீட்டுக் காணியின் உரிமையாளரினால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் நீதிமன்ற அனுமதியுடன் விஷேட அதிரடிப்படையினரின் உதவியுடன் குண்டினை நேற்றையதினம் செயலிழக்க செய்துள்ளனர். (மு-7)

# வெள்ளக்காடாகும் விளை நிலங்கள்
## விவசாயிகள் கவலை

வடக்கில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக வயல் நிலங்கள் நீரில் மூழ்கியமையால் பெரும் போக பயிர்ச்செய்கை கடுமையாக பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக நாடளாவிய ரீதியில் மழையுடனான வானிலை அதிகரித்துள்ளது.

இந் நிலையில் பெரும் போகத்துக்காக வயல் நிலங்களில் விதைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக் கனமழை காரணமாக வயல்கள் வெள்ளக்காடாக மாறியுள்ளது.

இதனால் தம்மால் உரிய காலத்தில் வயலில் உழுது விதைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளதாகவும் இதுவரை விதைக்கப்பட்ட வயல் நிலங்களிலும் நீர் நிரம்பியுள்ளதால் விதைகள் முளைக்கும் சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் கடந்த போகத்தில் நிலவிய கடும் வறட்சி, உரப் பிரச்சினையினால் தாம் பெரும் நஷ்டத்தினை எதிர் கொண்டதாகவும் இப் போகத்தில் மழை தம்மை இன்னல்களுக்கு உட் படுத்துவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17477)

**076 825 7716** (ஆகாஸ்)

## சிறுநீரகம் தேவை

B+ குருதியுடையவருக்கு
B+, B- மற்றும் O+, O- வகை
குருதியுடைய சிறுநீரகம்
உடனடியாகத் தேவை.

(17472)

**076 362 7149**
**077 780 9925**

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்புலம் வீதியில்
மின்சார வசதியுடன் கூடிய
ஐந்து பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

(17471)

**076 105 6343**
**076 928 4191**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

(C-7434)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**

## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2025ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் **0768226244**

எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் (C-7438)
விண்ணப்ப முடிவு திகதி **07-11-2023**

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

யாழ்ப்பாணம்-1 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | கொழும்பு 0777469777 | திருகோணமலை 0768226237 | சாவகச்சேரி 0768226242
யாழ்ப்பாணம்-2 0768226243 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | 0776697960 | கொடிகாமம் 0764550675
மானிப்பாய் 0768226238 | 0764550671 | 0777718322 | சங்கானை 0777726322 | வேலணை 0743900353 | 0777720322
கோப்பாய் 0764550674

**V2 Travels** 0768226236

## 2024 ஆம் ஆண்டு நாட்காட்டி கலண்டர்கள் விற்பனைக்கு

**மெய்கண்டான்**
- ◆ மாதக் கலண்டர் (சிறியது, பெரியது)
- ◆ முஸ்லிம் கலண்டர்

**டயரிகள்**
- ◆ டெஸ்க் டயரி
- ◆ மெனேஜ்மன்ட் டயரி







(C-7435)

குறைந்த விலையில் தரமான முறையில் அச்சிட்டு தரப்படும்

**ஜேவின் பிரிண்டர்ஸ் 072 093 2800**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org